பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 12 புதன்கிழமை (29.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 274

# குடாநாட்டுக்கு கப்பலில் இரட்டிப்பு மடங்கு உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படும்?

## விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கையாம்

கொழும்பு,ஓகஸ்ட் 29

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு கப்பலில் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்களின் அளவை இரட்டிப்பாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தனா தெரிவித்திருக்கிறார்.

இப்போது மாதாந்தம் 18, 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதனை இரட்டிப்பாக்கி - 35, 000 மெற்றிக் தொன்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வர்த்தக, கூட்டுறவு, நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் பந்துல குணவர்த்தனா தகவல் வெளியிட்டார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நவிண்டில் முகாம் மீது நேற்று கிரனேட் தாக்குதல்

உடுப்பிட்டி, ஓக.29

நவிண்டில் பகுதியில் அமைந்துள்ள டேவிட் முகாம் மீது நேற்றுக்காலை 7.10 மணியளவில் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் ஏற்பட்ட சேதம் குறித்து தகவல் தெரியவரவில்லை.

இத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் படையினர் பலத்த தேடுதல்களை நடத்தினர். (அ-1-155)

## ஆயித்தியமலையில் அமுக்கவெடித் தாக்குதல்

கொழும்பு, ஓக. 29

மட்டக்களப்பு - ஆயித்தியமலைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் பொலிஸாரின் வாகனத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட அமுக்கவெடித் தாக்குதலில் மூன்று பொலிஸார் காயமடைந்திருக்கின்றனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி திறக்கப்படவிருக்கின்ற கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முடித்துவிட்டு மட்டக்களப்பு நகருக்குத் திரும்பிக்கொண்டிருந்த பொலிஸாரின் வாகனத்தின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. காயமடைந்த மூன்று பொலிஸாரும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## முகமாலையில் நேற்றுமாலை புலிகள் தாக்குதல்

கொழும்பு, ஓக. 29

முகமாலை முன்னரங்கப் பகுதி மீது நேற்று மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு நடத்தப்பட்ட இத் தாக்குதலைப் படையினர் முறியடித்து விட்டனர் என்றும் இந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் அந்த நிலையம் தெரிவித்தது.

படையினருக்கு சேதம் ஏற்படவில்லை என்றுழ் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து இது தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (அ-1)

# கொழும்புத் துறைமுகத்துக்குள் கப்பல்கள் நுழைய மற்றொரு வாயில் திறக்கப்படும்

## நீருக்கடியிலான பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஓகஸ்ட் 29

கொழும்புத் துறைமுகத்துக்குள் கப்பல்கள் நுழைவதற்கான வடக்கு வாசலையும் மீளத் திறந்து விடுவதற்கு பாதுகாப்பு வட்டாரங்கள் தீர்மானித்திருக்கின்றன. அதற்கேற்ப அப்பகுதியில் நீருக்கடியிலான பாதுகாப்பு முறைமை ஸ்தாபிக்கப்பட்டு, அது சோதனை செய்யப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது மூடப்பட்டிருக்கும் இரண்டாவது வாசலைத் திறந்து விடுவதன் மூலம் சரக்குக் கப்பல்கள் நீண்ட நேரம் காத்துக் கிடந்து, அதனால் கப்பல் சேவை நிறுவனங்களுக்கும், இறங்குதுறைகளுக்கும் பெரும் தொகைப் பணம் வீண்விரயமாகிப் போவதைத் தவிர்க்க முடியும் என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கொழும்புத் துறைமுக நுழைவாயில்களில் ஒன்று மூடப்பட்டதால் ஏற்படுத்தப்பட்ட நீண்டநேரக் கால தாமதம், தென்னாசியாவில் ஏனைய துறைமுகங்களுடன் இந்த வர்த்தகத்தில் போட்டியிடும் கொழும்புத் துறைமுகத்தைப் பெரும் பின்னடைவுக்குள் தள்ளி நிற்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக இந்த வடமுனை வாசல் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக மூடப்பட்டுக் கிடக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தாஸின் கட்டுரைகளை சிங்களத்தில் மொழிபெயர்ப்பவருக்கும் அச்சுறுத்தல்!

### அலுவலகத்துக்கு வந்து மிரட்டிச் சென்றனர்

கொழும்பு, ஓக. 29

'லங்காதீப' சிங்களப் பத்திரிகையின் மாகாணச் செய்தி ஆசிரியர் டபிள்யூ, ஜி. குணரத்ன நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து வெளியார் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டார்.

குணரத்ன அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவேளை, அங்குவந்த வெளியார் ஒருவர், அவருடன் செய்தி விடயமாக கலந்துரையாடவேண்டும் எனத் தெரிவித்து அலுவலக வாசலில் அனுமதி பெற்றார். மூன்றாம் மாடியில் உள்ள செய்திப் பிரிவுக்கு சென்ற அந்த நபர், 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இக்பால் அத்தாஸ் எழுதும் கட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பேத்தாழை வாவியில் 3 இளைஞர்கள் படகில் வெடிபொருள்களுடன் கைது

மட்டக்களப்பு, ஓக.29

வாழைச்சேனை, பேத்தாழை வாவியில் வெடிமருந்துகளை ஏற்றிச்சென்ற இயந்திரப்படகு ஒன்றை தாம் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். படகில் பயணித்த மூன்று இளைஞர்களும் பொலிஸாரினால்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் இருவரை வாழைச்சேனையில் காணோம்

மட்டக்களப்பு,ஓக.29

வாழைச்சேனை, நாசிகன் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை என்று வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அதே பகுதியைச் சேர்ந்த

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பாலமோட்டையில் திங்களன்று மாலையில் மோதல்

கிளிநொச்சி, ஓக.29

வவுனியா மாவட்டம் பாலமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை படைத்தரப்பின் முன்னேற்ற முயற்சியைத் தடுத்து நிறுத்தித் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலில் படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், ஐந்து படையினர் காயமடைந்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் பகுதியில் புலிகள் ஷெல் தாக்குதல்

கொழும்பு,ஓக.29

நாகர்கோயில் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்திருக்கின்றனர். இந்தத் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# உடன்பாட்டின் நோக்கத்தை சீர்குலைக்கும் முயற்சி கோத்தபாய கருத்துக் குறித்து கண்காணிப்புக்குழு கவலை

கொழும்பு, ஓக.29

போர்நிறுத்த உடன்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகள் - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் - சமீப காலமாக வெளியிட்டுவரும் கருத்துகள் அந்த உடன்பாட்டின் நன்நோக்கங்களை சீர்குலைப்பவையாக அல்லது அதன் நல்லுணர்வை பாதிப்பவையாக அமைந்துள்ளன என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கவலை தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த வார இறுதியில், கிழக்கைப் போன்று வெகுவிரைவில் வன்னியையும் புலிகளிடம் இருந்து மீட்போம் என தெரிவித்த கருத்தை அடுத்தே கண்காணிப்புக் குழு கவலை வெளியிட்டுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் தீர்த்தத் திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள்

உடுப்பிடி,ஓக.29

தொண்டைமானாறு சந்நிதி ஆலயத் தீர்த்தத் திருவிழாவில் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பக்திபூர்வமாகப் பங்கேற்றனர்.

நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற தீர்த்த உற்சவத்தில் கலந்துகொள்ள அதிகாலை முதலே பக்தர்கள் ஆலயத்தில் திரண்டனர்.

வடமராட்சியைச் சேர்ந்தவர்களைத் தவிர வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து பல்லாயிரம் பக்தர்கள் ஆலயத்திற்கு வந்திருந்தனர்.

கரகம், காவடி, பறவைக்காவடி என நூற்றுக்குமேற்பட்ட காவடிகளை எடுத்து பக்தர்கள் தமது நேர்த்திகளை நிறைவு செய்தனர்.

அதேவேளை ஆலய உற்சவ காலத்தில் திருட்டுக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். பக்தர்களால் தவறவிடப்பட்ட பணம், நகை மற்றும் பொருள்கள் பிரதேச செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ஒலிபெருக்கி மூலம் அறிவித்து அவை உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டன.

பக்தர்களின் வசதிகருதி குடாநாட்டில் பலபகுதிகளில் இருந்தும் விசேட போக்குவரத்துவசதிகளும் செய்யப்பட்டிருந்தன. (அ-1-155)

## உயிர் அச்சுறுத்தலால் உடுப்பிட்டி இளைஞன் சரண்

யாழ்ப்பாணம், ஓக.29

உயிர் அச்சுறுத்தல் காரணமாக வடமராட்சியைச் சேர்ந்த 19 வயது இளைஞன் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சரண் அடைந்தார்.

சம்பந்தப்பட்ட நபர் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் நேற்று முன்நிலைப்படுத்தப்பட்டார் அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## லெவிண் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

**பிற்போடப்பட்டுள்ளது**

மேற்படி கழகத்தால் 26.08.2007 அன்று நடத்தப்பட விருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 25.09.2007 அன்று பிற்போடப்பட்டுள்ளது.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (64307) - நிர்வாகம்.

## தியாகி அறக்கொடை நிறுவனம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற

யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் நடத்தும் நான்கு மாத அழகுக் கலைப் பயிற்சி நெறியில்

* அழகுக்கலை (Facial) * Bridal Dressing
* சிகையலங்காரம் * Fabric Painting * கேக் ஐசிங்
* உணவு தயாரித்தல் * பூவேலை

ஆரம்பம் - 01.09.2007(வெள்ளிக்கிழமை)
இன்று முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர்.
தொடர்புகளுக்கு: 0779069544, 0714182395 (64244)

## கண்ணீர் அஞ்சலி



அருட்பணி
B.F. பொணிபஸ் அடிகள்

எமது கழகத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு வகையில் எம்முடன் தோளோடு தோள் நின்று அயராது உழைத்த அருட்பணி B.F.பொணிபஸ் அடிகள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அருட்தந்தையின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், குருக்கள், துறவியர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

புனித டொன் பொஸ்கோ கழகம்,
(ச-53493) புனித யாகப்பர் ஆலயம், இளவாலை.

## தவறிவிட்டது

கைதடி, நாவற்குழி, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவயோகச்செல்வன் செல்லம்மா என்பவரது தேசிய அ.அட்டை (488613650V) 25.08.2007 அன்று கைதடி நாவற்குழிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கைதடி ப.நோ.கூ. சங்கத்தில் ஒப்படைத்துதவவும். T.P.:0779072467

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை முன்னாள் பங்குத் தந்தையும் எமது பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தவருமான

**அமரர் அருட்தந்தை P.M.இம்மானுவேல்**

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

கற்கோவளம்
புனித செபஸ்ரியார்
பங்கு மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி




அருட்தந்தை
B.F.பொணிபஸ் அடிகள்

கடந்த 27.08.2007 அன்று காலமான எமது முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு B.F. பொணிபஸ் அவர்களின் இறைபணிக்காக இறைவனுக்கு நன்றி கூறி. அவரது ஆன்மா இறைவனில் நித்தியமும் சாந்திபெற எம் கண்ணீர்ப் பூக்களை அர்ப்பணிக்கின்றோம்.

பங்குமக்கள்,
(ச-53492) இளவாலை புனித யாகப்பர் ஆலயம்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 26 . 10 . 1975



ஆண்டவன் அடியில் 29 . 08 . 2006

**அமரர் யேசுதாசன் டேமியன்**


வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி காணத் துடித்த- எம்
ஆருயிர் வீர மகனே!
உமது கனவுகள் இலட்சியங்கள் யாவும்
பாதியிலே கரைந்ததன் காரணம் தான் ஏனோ!
அன்பான உள்ளமும் பாசமான அரவணைப்பும்
வீரமான செயலும் உம்மில் நிறைவாகவே கண்டோம்
உம் பிரிவு தாங்க முடியாமல் எமதுள்ளம் தவிக்கின்றது
இன்றோடு ஆண்டொன்று ஆகிவிட்டது - இவ்வாறு
ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடிப் போனாலும்
ஆறாது எம் துயரம், நீங்காது என்றும் உம் நினைவுகள்.

17/1, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(64106)

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மாமா, மாமி,
மைத்துனர்கள், மைத்துனிமார்கள், சகலன்மார்.

## 31 ஆவது அகவையில் 6 ஆம் மாத நினைவலைகள்

மண் மகிழ 29 . 08 . 1976



மனம் நெகிழ 28 . 02 . 2007

**அமரர் இராசேந்திரம் இளஞ்செல்வன்**

காகித விழா கண்டு மூவரும் பிரியமாய்
மகிழ்ந்து வாழ்ந்திருந்த வேளைதனில்
கயவர்களின் நயவஞ்சகச் செயலினால்
எம்மை எல்லாம் கலங்கவிட்டுச் சென்றீரே
உம் பிரிய மகளின் மழலை மொழி கேட்கிறதா?
நாமும் உம்அடி சேரும் வரை
உம் சிந்தனை வழி வாழ்வோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்டி வீதி,
சாவகச்சேரி. (64223) - மனைவி, மகள்.

## தவறிவிட்டது

கடந்த 25.08.2007 கப்பல் பயணத்தின் பின் தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் இரண்டு பயணப் பைகள் (Travaling Bags) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க.கனகம்மா, வட்டு தெற்கு, முதலிய கோயிலடி, வட்டுக்கோட்டை என்னும் முகவரிக்கு அல்லது 0776171576 என்னும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்

### நடராஜா சின்னப்பா



நீராவியடி, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் தெஹி வளையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சின்னப்பா 27.08.2007 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு திருமதி நடராஜாவின் அன்புமகனும் கனகம்மாவின் அன்புக்கணவரும் ஆனந்தநடராஜா (கணக்காளர் - தே.வீ.அ.அ.சபை, மன்னார்), ரவிக்குமார் (சுங்கத் திணைக்களம்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, Dr.சசிகலா (ஆதார வைத்தியசாலை, பாணாந்துறை), லக்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் நிசாந், வைஸ்ணவி, ரம்மியா, வெங்கடேஷ், விக்கினேஸ்(லண்டன்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி தர்மலிங்கம் - தங்கம்மா காலஞ்சென்றவர்களான கண்மணி (மலேசியா), பரிபூரணம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியதேவி(மலேசியா) காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (மலேசியா), தங்கத்துரை (சிங்கப்பூர்), திருமதி தங்கமுத்து பொன்னம்பலம் (சித்தன்கேணி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.08.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (18A ,கம்பல் பிளேஸ், தெஹிவளை) நடைபெற்று முற்பகல்10.30 மணிக்கு பூதவுடல் கல்கிசைஇந்து மயானத்தில் தகனஞ் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரமக்கள்
செல்வம், அப்பு, தவம்,
சிறீ, ராசன், மணியம்.

111, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (64309)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் தம்பாபிள்ளை சபாநாயகம்** *(சபா அண்ணை)*

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், லண்டன் நகரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பாபிள்ளை சபாநாயகம் (சபா அண்ணை) இறைபதம் எய்தி 31 ஆம் நாளான இன்று (29.08.2007) அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் நண்பர்கள், உறவினர்களை வேண்டிக்கொள்வதுடன் அவர் 2007.07.29 ஆம் திகதி லண்டனில் காலமான சமயம் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (64247)

திருமதி இ.சபாநாயகமும் குடும்பத்தினரும் (லண்டன்)
இ.இராசதுரை (மைத்துனர் - உரும்பிராய்),
இ.இராஜேஸ்வரன் (மைத்துனர் - திருகோணமலை)

## மரண அறிவித்தல்கள்

### தில்லைநாயகி ஆறுமுகம்

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட தில்லைநாயகி ஆறுமுகம் சம்பியாவில் 27.08.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய பொறியியலாளர் தம்பு ஆறுமுகத்தின் மனைவியும் விஜயலட்சுமி, ஞானலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் தேவநேசன், அன்ரு ஆகியோரின் அன்பு மாமியும் தம்பு குமாரவேல், காலஞ்சென்ற குழந்தைவேல், வள்ளிநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.08.2007) புதன்கிழமை சம்பியாவில் நடைபெறும். அத்துடன் வட்டுக்கோட்டை சங்கரத்தை வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் துக்க அனுஷ்டிப்பு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி.53498) த.குமாரவேல் (வட்டுக்கோட்டை).

### திருமதி அகிலாண்டநாயகி இராஜரட்ணம்



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலாண்டநாயகி இராஜரட்ணம் (25.08.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29.08.2007) புதன்கிழமை பி.ப.4 மணிக்கு கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(64305) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 10 ஆயிரம் ஹெக்ரேயர் நிலத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.29

குடாநாட்டில் நிலவும் உணவுப்பொருள் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் 10 ஆயிரம் ஹெக்ரேயர் நிலத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குடாநாட்டில் 25 ஆயிரம் ஹெக்ரேயர் விவசாயநிலம் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. இதில் 12 ஆயிரத்து 500 ஹெக்ரேயர் நிலத்தை விவசாயத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் தற்போது குடாநாட்டில் நிலவிவரும் அரிசிக்கான தட்டுப்பாட்டை இல்லாமல் செய்ய முடியும்.

தற்போது 7 ஆயிரத்து 500 ஹெக்ரேயர் நிலத்திலேயே நெற்செய்யை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனை 10 ஆயிரம் ஹெக்ரேயராக மாற்றுவதன் மூலம் அரிசித்தட்டுப்பாட்டை நீக்க முடியும்.

படையினர் பயிர் நிலங்களை ஆக்கிரமித்து வைத்துள்ளமை மற்றும் மக்களிடையே ஆர்வமின்மை போன்றன விவசாய நிலங்கள் கைவிடப்பட்டிருப்பதற்குக் காரணங்களாகும்.

இந் நிலையில் விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பாக சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

10 ஆயிரம் ஹெக்ரேயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்வதன் மூலம் குடாநாட்டில் அரிசிக்கான தட்டுப்பாட்டை நீக்குவதுடன் விவசாயிகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-111)

## பொது நிர்வாக பரீட்சை முடிவுகள் வெளியாகின.

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் பொதுநிர்வாக இறுதிப் பரீட்சை (2005) பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 40 வீதமானவர்களே சித்தியடைந்துள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மீள்பரீட்சார்த்திகள், புதிய பரீட்சார்த்திகள் உட்பட தோற்றியவர்களில் 19 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

ஆங்கில மொழிமூலம் இடம்பெறும் மேற்படி கற்கையில் வருடாந்தம் 50 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

(202-95)

## கல்வயல் வாய்க்கால் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

கல்வயல் விளைவேலி வாய்க்கால் சிரமதானம் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

விளைவேலி துர்க்கை அம்மன் கோயிலிலிருந்து மட்டுவில் சந்தி வரை நீளமான வாய்க்காலை மட்டுவில், கல்வயல் பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்கள் இணைந்து சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்துள்ளன.

மழைகாலங்களில் நுணாவில் மேற்கு, கல்வயல் ஆகிய பகுதிகளில் உள்ள குளங்களின் வெள்ளம் இவ் வாய்க்கால் ஊடாக வெளியேற்றப்படுவது வழமை. வாய்க்காலில் மண் தூர்ந்து வெள்ளநீர் வடிந்தோடுவது குறைந்ததால் குளங்களில் நீர் நிறைந்து குடியிருப்புப் பகுதிக்கு உட்புகுவதையடுத்து வாய்க்கால் புனரமைக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.( 202-207)



நவோதய விழாவை முன்னிட்டு அண்மையில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கண்காட்சியை தீவக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி. ராதாகிருஷ்ணன் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் விஞ்ஞானப் பிரிவில் காட்சிப் பொருள்களுடன் மாணவர்கள் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

முதலாவது படத்தில் நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினமும் காணப்படுகின்றார்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# ஆய்வுகள் பூர்த்தியானதும் விரைவில் வழுக்கையாற்றுத் திட்டம் முன்னெடுப்பு

## யாழ்.அரச அதிபர் தகவல்

வலி.தென் மேற்கு,ஓக.29

வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஆய்வுகள் பூர்த்தியடையவுள்ளன. எனவே விரைவில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

எமது மக்களின் நூற்றாண்டு கால கனவாக இருந்து வரும் வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டம் நியாப் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புப் பற்றி ஏற்கனவே நிபுணர் ஒருவரால் ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அந்த அறிக்கையில் சில தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு உலக வங்கியும் மற்றோர் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது.எனினும் இந்த அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

கட்டடப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வரும் இக்காலகட்டத்தில் கமநலசேவை நிலையம் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்படுவது இறைவனின் ஆசி என்றே கூறவேண்டும். விவசாயிகள் இந்த புதிய நிலையத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எமது மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். விவசாயிகள் காலத்திற்கேற்ற வகையில் வேறு பயிர்களை பயிரிட வேண்டும். சோழன், குரக்கன், சாமை போன்றவற்றை பயிரிடுவதன் மூலம் உணவுத் தேவையை பெருமளவு பூர்த்தி செய்ய முடியும். வருமானத்தையும் பெருக்க முடியும்- என்றார்.

யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். பிராந்திய பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (202-135)

## காலம் கடந்த பதிவுகளுக்கு உடுவிலில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.29

உடுவில் பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் என்பவற்றுக்கான காலம் கடந்த பதிவுகளுக்கான நடமாடும் சேவை அடுத்தமாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இச் சேவையில் பயன்பெற விரும்புபவர்கள் தங்கள் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு தேவையான ஆவணங்களுடன் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்களிடமோ அல்லது பிரதேச செயலகத்திலோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் தெரிவித்தார். (202)

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வினைத் திறமை காண் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.29

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் பரீட்சை நாளை வியாழக்கிழமை யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான பிரவேச அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (202-207)

## சாவற்காடு முதியோர் சங்கத்திற்கு சமூக சேவைகள் அமைச்சு உதவி

ஆனைக்கோட்டை சாவற்காடு முதியோர் சங்க உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் நிதி உதவிகளை வழங்குவதற்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா நடவடிக்கை எடுத்துள்ளார் என அமைச்சு தெரிவித்துள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்களின் நலன் கருதி உதவித் தொகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவர்களுக்கு முதியோர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்- என்று அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## வரி அனுமதிப் பத்திரம் பெறாத வியாபாரிகள் மீது நடவடிக்கை

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைப் பிரிவில் வரி செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறாத உணவுப்பொருள்கள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களை நடமாடி விற்பனை செய்பவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

பிரதேச சபைப்பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமல் உணவுப் பொருள்கள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களை விற்பனை செய்பவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

எனவே விதிமுறைகளை மீறி அனுமதியின்றி விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-135)

## விவசாயிகளின் பிள்ளைகளுக்கு உதவ புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.29

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் வசதி குறைந்த விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின கல்வி வளர்ச்சிக்காகப் புலமைப் பரிசில் நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

கமநல சிறுவர் புலமைப் பரிசில் நிதியம் என்னும் இந் நிதியத்தினூடாக விவசாயிகளின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இந் நிதியத்திற்கு அரச திணைக்களங்கள், விவசாய சம்மேளனங்கள், தனிநபர் பங்களிப்பு மற்றும் கொடி விற்பனை மூலம் நிதி திரட்டப்பட்டுள்ளது.

இந்த நிதியத்திற்கு தேவையான நிதி உதவிகளை வழங்க விரும்புவோர் தமக்கு அருகில் உள்ள கமநல சேவை நிலையங்களில் நிதியை வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட கமநல அபிவிருத் தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (202)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.29

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் பன்னிரெண்டாம் நாளான இன்று புதன்கிழமை ' ஐந்து முகம் தோன்றில் ஆறு முகம் தோன்றும்' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் கோசி வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார்.

பன்றிக்கோட்டு அறநெறிப் பாட சாலை, நல்லை ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

(203-79-111)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்கும் சாந்தம் பொறுமை சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்தும் தீருமே
சினமு மடங்குமே தேர்.

- யோகர் சுவாமிகள்

### ஆறு முகத்துள் எத்தனை முகங்கள்?

*பாடுமடி யார்கள் குறைதீர்த்த முகமொன்று*
*பரமனுக்கு உபதேசம் செய்த முகமொன்று*
*ஆடுமயில் மீதினில் அமர்ந்த முகமொன்று*
*அசுரர்தமை யழிக்கவென எழுந்த முகமொன்று*
*நாடுநலம் பெற்றிடவே! நயந்த முகமொன்று*
*தன்தந்தை தாயுடன் னமர்ந்த முகமொன்று*
*தேடுகின்ற செல்வமதை நல்கும் முகமொன்று*
*தேவர்களிற் கருள்சுரந்த கருணை முகமொன்றே!*

-சரசாலையூரான்

### வீதிதனில் வணங்குவோமே!

தமிழ்மொழியைத் தாரணிக்கு ஈந்திட்ட எம்பெருமான் நல்ல
அமிழ்தான கவிதைகளை ஆக்குதற்கு புலவர்கட்கு உதவும் வேலோன்
அழகான நாவலின் கவிதனை ஔவைக்கு ஈந்த செல்வன்
அருளான மயில்மீது வருகின்றான் வீதிதனில் வணங்குவோமே!

-கவிமணி கந்தமுருகேசதாசனார்.




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று பன்னிரெண்டாம் திருவிழா.
விழா சிறப்புற வாழ்த்துவோர்:
ஸ்ரீ முருகன்
தொலைத்தொடர்பு நிலையமும் முகவர் தபால் நிலையமும்.
இல.303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2670,5392 Fax: 021 222 3214
e.mail: srimurugan @ eureka. lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ வரணி மகா வித்தியாலய அதிபர்
# திருவாளர் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்களின்
# சேவை நயப்புச் சிறப்பு மலர் 29.08.2007

### ஆசிச் செய்தி



அதிபர் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து, நிறைவாக வரணி மகா வித்தியாலயத்தில் நான்கு வருடங்கள் அதிபராக இருந்து இன்று 29.08.2007 ஓய்வு பெறுகின்றார். சிறந்த சமயியாக, சமயப் பேச்சாளராக மாணவர்களைச் சமய நெறிமுறையில் வளர்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர். சேவையிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் திட ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்கு எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரையும் சுட்டிபுரம் அம்பாளையும் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

**சிவஸ்ரீ இ. குமாரசுவாமி குருக்கள்,**
சுட்டிபுரம் அம்மன் தேவஸ்தானம், வரணி.

### சிறந்த சமய சமூக சேவையாளர்

அதிபர் செ. சுப்பிரமணியம் அவர்கள் கல்வித் துறையில் ஆசிரியராக வருவதற்கு முன்பிருந்தே என்னுடைய நண்பர். ஆசிரியராகச் சமகாலத்தில் ஒரே பிரதேசத்தில் நியமனம் பெற்றுக் கடமையாற்றியுள்ளோம். பொறுமை, அமைதி, மற்றவர்களை மதிக்கும் பண்பு, பிறருக்கு உதவுதல், தன்னடக்கம், சமய விழுமியங்களைக் கடைப்பிடித்தல் ஆகிய பண்புகளைக் கொண்ட உயர்ந்த எண்ணம் கொண்ட ஒரு மனிதர். முப்பதாண்டுகளாக ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவர் பல்வேறு சமய சமூக நிறுவனங்களில் அங்கம் வகிப்பதால் மக்கள் சேவையில் ஓயாது ஈடுபட்டுக் கொண்டே இருப்பார். அவரது ஓய்வுகாலம் சிறப்பாகவும் தன் குடும்பத்தாருடன் நலமே வாழவும் அவரது மக்கள் சேவை மேல்மேலும் தொடரவும் இறைவன் அவருக்கு நல்ல தேகாரோக்கியத்தைக் கொடுக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

**நா. சத்தியநாதன்,**
கோட்டக்கல்வி அலுவலர், சாவகச்சேரி.

### மலர்ந்த முகம் மறையாத சேவையாளர்

எமது அதிபர் பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பலவகையிலும் உழைத்தவர். அசாதாரண சூழ்நிலை நாட்டில் நிலவிய வேளையிலும் பாடசாலையைக் கட்டிக்காத்தவர். மாணவர், ஆசிரியர், பெற்றோர் இன்னும் பாடசாலைசார் சமூகத்தோடு சுமூகமான உறவைப் பேணிப் பாடசாலையை வளர்த்துவந்தார். அதற்கேற்ப நற்குணங்கள் அவரிடமுண்டு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஓர் அதிபரை வரணி மகா வித்தியாலயம் தனது அதிபர் வரிசையிலே இணைத்துக் கொண்டமையை இட்டுப் பெருமையடைகின்றது. அதிபரின் சேவையை பாடசாலைச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகிறது. இவரின் ஓய்வுக் காலம் எல்லா வகைச் சிறப்பும் பொருந்தியதாக அமைய சிட்டிபுரம் கண்ணகை அம்மனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**திருமதி தி. இந்திரராசா,**
தலைவர், ஆசிரிய சகோதரத்துவம்,
வரணி மகா வித்தியாலயம்.

### பாடசாலை அபிவிருத்திச் சபையின் வாழ்த்துச் செய்தி

ஆசிரியராக, அதிபராகப் பல பாடசாலைகளில் சேவையாற்றி இறுதி நான்கு வருடங்கள் வரணி மகா வித்தியாலயத்தின் அதிபராக உயர் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்களின் சேவை நலனைப் பாராட்டுவதற்குப் பாடசாலை அபிவிருத்திச்சபை மிகுந்த கடமைப்பாடுடையது.

அதிபர் அவர்கள் அயராத உழைப்பால் மாணவர்களது கல்வியையும் பாடசாலையையும் வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். இதனால்போலும் மாணவர்களது கல்வி நிலையும் பாடசாலைப் பௌதிக நிலையும் வளர்ச்சி கண்டிருக்கிறது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சை ஆகிய போட்டிப் பரீட்சைகளில் கணிசமான மாணவர்கள் சித்தி அடைந்து உயர்கல்வி பெறும் வாய்ப்பைப்பெற்று கொடுத்திருக்கின்றார்.

அத்தோடு பாடசாலையில் ஒரு சாரணர் அணியை உருவாக்கிப் பதிவுசெய்த பெருமையையும் பெற்றவர். இவரது ஓய்வுக் காலம் ஓய்வாக அமையாது சமூக சேவையில் ஈடுபட எல்லாம் வல்ல இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

**வி. குணசிங்கம்,**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை.

### வாழ்த்துச் செய்தி

பாடசாலைகள் இன்றைய உலகின் பிரதான சமூகமாற்ற நிறுவனங்களாகக் கொள்ளப்படுகின்றன. பாடசாலை முகாமைத்துவத்தின் மூலவேராகப் பாடசாலை அதிபர் அமைகின்றார்.

ஓய்வுபெற்றுச் செல்கின்ற செ. சுப்பிரமணியம் அவர்களது தனது அர்ப்பணிப்பு மிக்க அதிபர் சேவையினாலும் பன்முகப்பட்டான சமூக சேவைப் பங்களிப்புகளாலும் பாடசாலைச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்துள்ளார்.

இவரது ஓய்வு கல்விப் புலத்தில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தி உள்ளபோதிலும் இவர் மாணவர்களுது முன்னேற்றத்திற்கு ஆற்றிய சேவைகளைக் கல்விச் சமூகம் என்றும் போற்றும் இவர் வட மாகாண அதிபர் சங்கத்தின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான பிரதிநிதியாக ஆற்றிய ஆக்கபூர்வமான சேவைகள் பாராட்டத்தக்கவை. ஓய்வு காலத்தில் இவர் ஆரோக்கியமாகவும் மனநிறைவோடும் வாழ வாழ்த்துகின்றேன்.

**செ. சேதுராசா,**
அதிபர், நெல்லியடி ம.ம.வி.

### சிறந்ததொரு வழிகாட்டியாகச் செயற்பட்டவர்

வரணி மகா வித்தியாலயத்திலே செ. சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக இருந்த காலத்திலேதான் முறைசாராக் கல்விப் பிரிவினை எமக்கு அறிமுகப்படுத்தியதுடன் மிக விரைவாக சிகை அலங்காரம், கேக் அலங்கரிப்பு, ஆடை அமைப்பு, கணனிப்பயிற்சி போன்ற துறைகளை அறிமுகப்படுத்தியும் செயற்படுத்தியும் காட்டியவர். இன்றும் இத்துறைகள்சார் பயிற்சிகள் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருப்பதும் இவருடைய சேவையின் மேம்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு எமக்கும் எமது சமூகத்திற்கும் சேவையாற்றிய அதிபர் அவர்களை ஓய்வு பெறும் இந்நாளிலே பாராட்டி வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,**
முறைசாராக் கல்விப் பிரிவு.



## திரு. செல்லத்துரை சுப்பிரமணியம்

*B.A. Dip in Education SLPS Grade I*

பிறப்பு: மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. 29.08.1947
வாழ்விடம் : பெரியமாவடி, சாவகச்சேரி. தொ.பே.: 0776155930
ஆரம்பக் கல்வி : யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்.
இடைநிலைக்கல்வி : யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில்.
உயர்கல்வி : யா/ புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி.
கல்வித் தகைமை : கலைப்பட்டதாரி [B.A.]
இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு.
தொழில் தகைமை : பட்டப்பின் கல்வி டிப்ளோமா [Dip. in Education]
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

பயிற்சிகள் :
1. கூட்டுறவு உயர்தரப் பயிற்சி
2. சாரணர் தரு சின்னப் பயிற்சி [Scout wood Badge]
3. அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி NIE
4. உளவளத்துணை (புறநிலை அலகு, யாழ். பல்கலைக்கழகம்)

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 01) 04.11.1976 - 28.02.1977 | - நு/ நோட்டன் ஹணபதி வித்தியாலயம் |
| 02) 01.03.1977 - 14.02.1985 | - நு/ சென். ஜோசெப் ம.வி. |
| 03) 15.02.1985 - 28.02.1988 | - யா/ மீசாலை விக்கினேஸ்வர ம.வி. |
| 04) 01.03.1988 - 30.06.1988 | - யா/ திருநாவுக்கரசு ம. வி., கொடிகாமம் |
| 05) 01.07.1988 - 30.04.1992 | - யா/ மீசாலை விக்கினேஸ்வர ம. வி. |
| 06) 01.05.1992 - 18.07.2002 | - யா/ கமலாசனி வித்தியாலயம், மட்டுவில். |
| 07) 19.07.2002 - 28.09.2003 | - யா/ உசன் இராமநாதன் ம. வி. |
| 08) 29.09.2003 - 29.08.2007 | - யா/ வரணி ம.வி. |

### பல்துறை ஆற்றல் மிக்க அதிபர்

மணிவிழாக் காணும் அதிபர் செ. சுப்பிரமணியம் அவர்கள் நு/ மஸ்கெலியா புனித ஜோசப் மகா வித்தியாலயத்தில் 1976இல் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து சுமார் 13 வருட காலங்கள் ஆசிரியராகவும் 18 வருட காலங்கள் அதிபராகவும் கல்விப் பணியாற்றியுள்ளார். க.பொ.த. (உ/த) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ், புவியியல், பொருளியல் ஆகியவற்றைக் கற்பிக்கும் நல் ஆசானாகத் திகழ்ந்தவர்.

சாரணியத்துறையில் மிக நாட்டம் கொண்ட இவர் தென்மராட்சிப் பாடசாலைகளில் அதன் வளர்ச்சிக்காக உழைப்பவர். பல ஜம்போறிகளில் கலந்துகொண்டவர். சனசமூக நிலையங்கள், சைவ அமைப்புக்கள், அரிமாக் கழகம், கூட்டுறவுச் சங்கம் போன்ற நிறுவனங்கள் ஊடாக சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்தவர்.

வரணி மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வு பெறும் அதிபரின் சேவையைப் பாராட்டுவதுடன், அவரும் அவரது குடும்பத்தினரும் நீண்ட ஆயுளும் குறைவற்ற செல்வங்களும் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அ. கயிலாயபிள்ளை,**
அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை).

### வாழ்த்துச் செய்தி



வரணி மகா வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியம் பாடசாலையின் கற்றல் கற்பித்தலுடன் ஆசிரியர் நலன், பௌதிகவள விருத்தியில் கண்ணும் கருத்துடன் கடமையாற்றினார். சாரணர் உதவி மாவட்ட ஆணையாளராகவும் செயற்பட்டு வருகின்றார். 2002 இல் காலி மாவட்டத்தில் சாரணர் ஜம்போறிக்கு எமனது வலயத்திலிருந்து சமாதான செய்தியுடன் மோட்டார் சைக்கிள் யாத்திரை செய்த ஐவரில் ஒருவர்.

2000ஆம் ஆண்டு இடப்பெயர்வில் அனர்த்த முகாமைத்துவத்தில் மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தை வல்லைசிவகுரு வித்தியாலயத்தில் முழுமையான பாடசாலையாக இடம்பெயர்ந்த மாணவர் ஆசிரியருடன் இல்ல விளையாட்டுப் போட்டியையும் நடத்தினார். இவ் அதிபர் எனது பணிப்பின்படி வரணி மகா வித்தியாலயத்தைப் பொறுப்பேற்று அமைதியான நல்ல நிர்வாகத்தை செய்து ஓய்வுபெறும் வேளை சுகநலத்துடன் வாழ்ந்து நற்சேவை செய்ய வாழ்த்துகிறேன்.

**வ. செல்வராசா,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி, (முன்னாள் தென்மராட்சி வ.க.ப).

### முன்மாதிரியான அதிபர்



அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட அதிபர் ஒரு சாதனையாளர். கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டத்தின் பெறுமதிகளை விளங்கிக் செயற்பட்டார். சிறந்த சேவை செய்வோர் எதிர்நோக்கும் சவால்கள், குறுக்கீடுகள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வெற்றி கண்டுள்ளார். நாட்டுச் சூழ் நிலைக்கேற்ப சமூகத்தீர்வு கண்டு மாணவர் கல்வியைப் பாதிக்காது வழிநடத்திய நிர்வாகி என்பதை நிரூபித்துள்ளார்.

கற்பித்தல், நிர்வாகம் என்பவற்றுக்கு அப்பால் சமூகம் பயன்பெறக்கூடிய பண்புகள், நடத்தைகள் போன்றவற்றைப் பின்பற்றக் கூடிய பண்பாளர். சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் பலவழிகளிலும் பணிசெய்த அதிபர் அவர்களின் சேவை தொடரட்டும் இறையாசிபெறப் பாராட்டுகின்றேன்.

**ஆ. சாதாசிவமூர்த்தி,**
ஓய்வுபெற்ற அதிபர்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ வரணி மகா வித்தியாலயம்.**

### சேவை நயப்பு

அதிபர் செல்லத்துரை சுப்பிரமணியம் அவர்கள் தென்மராட்சிக் கல்வி வலயக்கல்வி வலயத்தில் வரணி ம.வியில் நான்கு வருடங்கள் சிறந்த ஆசானாகவும் நல்ல அதிபராகவும் செயற்பட்டுள்ளார். இன்று 29.08.2007 ஓய்வுபெறும் இவரது பணிகள் பாராட்டுக்குரியவை.

கல்விப் பணி புரிவதில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டி வந்த அதிபர் அவர்கள் சமூகப் பணிபுரிவதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டவர். சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவராகவும் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் பணியாற்றிச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவர் தனது ஓய்வுக் காலத்திலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் சேவைகளை வழங்கி, உடல் நலமும், மனமகிழ்வும், பொருள் வளமும் பெற்று வாழவேண்டும் என்று வாழ்த்தி அவரது சேவைகளையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

**திருமதி அ. வேதநாயகம்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

### ஓய்வு காலத்திலும் ஓயாத அலை எங்கள் அதிபர்

தனது சேவைக் காலத்தின் நிறைவுப் பகுதியில் நான்கு வருடங்கள் எமது வித்தியாலயத்தின் அதிபராகச் சேவையாற்றி உள்ளார். பாடசாலையின் கல்வி வளர்ச்சியையும் பௌதீக வளத்தையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்தினார். ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட 2ஆவது மாடிக் கட்டடம் ஒன்றையும், கழிப்பறைத் தொகுதியொன்றையும் உருவாக்கினார். வித்தியாலய பான்ட் இசைக் குழுவும் இவரது காலத்திலேயே உருவாக்கப்பட்டது. பாடசாலைக்கு மின்னிணைப்பைப் பெறுவதிலும் முயற்சி செய்து முக்கியமான சில பகுதிகளுக்கு மின்சார வசதிகிடைக்க வழிசெய்தார். சுமார் இருபத்திமூன்று கணனி வசதிகளைக் கொண்ட கணனிக் கற்கை நிலையம் ஒன்றையும் பாடசாலைக்குத் தேடிக்கொடுத்த பெருமை எமது அதிபரையே சாரும்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற தென்மராட்சி இடப்பெயர்வின் போது அதிபர் அவர்கள் சாவகச்சேரிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தவர். அவரது சமூகப் பணி நீண்டது. சமூகத்திற்கான அவரது சேவைகள் மேலும் தொடவேண்டும். அதற்காக அவருக்கு சிறந்த தேகாரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்கவேண்டுமென இறைவனை இறைஞ்சுவோமாக.

**சு. கோமலேஸ்வரன்,**
பிரதி அதிபர், யா/ வரணி ம.வி.

### ஆளுமைமிக்க அதிபர்

எமது பாடசாலையில் சிறந்த ஆளுமை மிக்க அதிபராக பல வருடங்களாக கடமையாற்றிவரும் அதிபர் செ. சுப்பிரமணியம் அவர்கள், இக்கட்டான கால கட்டத்திலும் பாடசாலையை நிலை தளரவிடாது வளர்த்த பெருமையும், எமது பாடசாலை தனது வரலாற்றிலே சிறந்த பரீட்சை பெறுபேறுகளை பெற்ற காலத்தில் அதிபராக இருந்த பெருமையும் எமது அதிபரையே சாரும். பாடசாலைச் சமூகத்தை சிறந்த வகையில் ஒழுங்கமைத்து, சமூக, சமய பணிகளாற்றி எம்மை எழுத்தறிவித்து வளர்த்த பாடசாலைக்கு பெருமை சேர்த்த அதிபரின் சேவையைப் பாராட்டுவதில் எமது சங்கம் மகிழ்வடைகிறது.

**ந. சந்திரசேகரம்,**
பழைய மாணவர் சங்கச் செயலாளர்,
சிரேஷ்ட விரிவுரையாளர் பொருளியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### Message of Felicitation

*I have pleasure in sending this message of felicitation at the retirement of Lion Sellathurai Subramaniam as Grade 1 Principal of J/ Varany Maha Vidyalayam. Duruing his tenure of service at the above establishment, he has produced better results in Grade 5 Scholership, G.C.E. (O/L) and G.C.E. (A/L) Examinations. His tireless efforts and endeavour has brought in a 'Computer Training centre' for the rural Children in the institation. His dedication and devotion towards social and spirtual fields bave moulded the children fit to live in the society. He has pleasant ways and I am happy to wish him well and for a prosperous life.*

**S. Navaratnasamy** J.P.,
Varany.

### ஆசிரியர் குழாத்தைக் கவர்ந்தவர்

அதிபர் செ. சுப்பிரமணியம் அவர்கள் எனது முதற்தர மாணாக்கர். அவர் மாணவப் பருவத்தை மிகவும் ஒழுக்க சீலராக இருந்து கற்று புகழ்பூத்த பள்ளி மாணவனாகத் திகழ்ந்து அன்றைய ஆசிரியர் குழாத்தைக் கவர்ந்த ஒருவராக இருந்தார்.

பள்ளிப்பருவத்தில் சமூகத் தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாரென்பதை ஊரே அறியும். இந்த அதிக ஈடுபாடு அவரது கற்பித்தற் காலத்திலும் தொடர்ந்து சமூகத் தொண்டனாகவும் துலங்க வழிவகுத்ததெனலாம்.

நிர்வாகத் திறமையும் எவராலும் மெச்சாமலிருக்க முடியவில்லை. எடுத்த காரியத்தை இனிது முடிப்பதில் செயல் வீரனாகத் திகழ்ந்ததை நான் அறிவேன்.

சிறப்போடு தனிப்பட்ட முத்திரையொன்றினைத் தமது சேவைக்காலத்தில் பதித்துப் பரிணமிக்க இவர் கொடுத்து வைத்தவர் என்றே கூறலாம். ஏனையோர் கணிப்பை பெற்றவர். மேலும் தனது ஓய்வு காலத்தைச் சீருஞ்சிறப்பாக மேற்கொள்ள கடவுளைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**ச. சின்னத்தம்பி,**
B.A., Dip. in Edu., M.A.
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும்
முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும்.

### கல்விக் கடலில் கைகொடுத்த ஆசான்

தனது வாழ்க்கையைக் கல்விக்காக அர்ப்பணித்துக் கல்விப் பாதையைக் காட்டியவர். பாதை தெரியாது நின்றபோது அன்புடன் என்னை அரவணைத்து மீசாலை விக்கினேஸ்வரா பாடசாலையில் உயர்கல்வி கற்க ஊக்குவித்து, பல்கலைக்கழகம் செல்ல வழிகாட்டிய ஆசான். நூலகம் செல்லுங்கள் என்று கூறி நூலகத்தின் நன்மையை உணர வைத்தவர். எனது கல்விக்கும் நற்பண்புக்கும் வழிகாட்டிய ஆசான். எழுத்தில் எழுதிட என் ஆசானின் கல்விப் பணிகள் எண்ணிலடங்கா. இவரை ஓய்வுபெறும் இவ்வேளையில் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

**வை. பிரேம்குமார் (ஆசிரியர்)**
ஆசானால் வளர்க்கப்பட்ட மாணவன்,
வவுனியா வடக்கு, வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கான கல்வி வலயம் மட்டக்களப்பில் திங்கள் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஓக. 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கென தனியான கல்வி வலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் ரவூப் ஏ. மஜீத், அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மட்டக்களப்புக்கு வருகை தந்து இந்த வலயத்தை வைபவ ரீதியாக திங்களன்று ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி கலாசார மண்டபத்தில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. 30 வருடங்களுக்குப் பின்னர் இப்பகுதிக்கு விஜயம் செய்த கல்வி அமைச்சருக்கு அங்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

# வடக்கு முஸ்லிம்களுக்கு சமாதானச் செயலகம்

புத்தளம்,ஓக.29

''வடக்கு முஸ்லிம்களுக்கெனத் தனியான சமாதானச் செயலகமொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தனது பூரண ஆசீர்வாதத்தையும், ஒத்துழைப்பையும் வழங்க முன்வந்துள்ளார் என மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வடக்கு முஸ்லிம்களுக்கான சமாதானச் செயலகம் கடந்த வெள்ளியன்று புத்தளம் தில்லையடியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் பதியுதீன் தொடர்ந்து தனதுரையில் கூறியதாவது-

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியை நான் சந்தித்து உரையாடினேன். இதன்போது வடக்கு முஸ்லிம்களுக்கான தனியான சமாதான செயலகம் ஒன்று ஆரம்பிக்கப்படுவதை ஜனாதிபதி வெகுவாக ஆதரித்தார்.

இந்தச் சமாதான செயலகத்தில் எந்தவித அரசியல் கலப்படமும் இல்லை. இங்கு பணியாற்றும் ஊழியர்கள் சம்பளம் எதையும் பெறமாட்டார்கள். இது யுத்தம் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்படவில்லை. சமாதானத்தை ஏற்படுத்தவே நாம் இதனை நிறுவியுள்ளோம்.

முஸ்லிம்கள் என்றுமே சமாதானப் பிரியர்கள். அவர்கள் யுத்தம் செய்யவில்லை. நாட்டைத்துண்டாடவும் இல்லை. சமாதானத்துடன் சுயகௌரவத்துடன் வாழ அவர்கள் விரும்புகிறார்கள். என்றார்.



நல்லூர்க் கந்தன் பக்தர்கள் புடைசூழ மஞ்சத்தில் திருவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் காட்சி. *(படங்கள்: லக்ஸ்மன்)*

# தரம் ஒன்று மாணவர் அனுமதி சுற்றுநிருபத்தின் இறுதி வடிவத்தை சமர்ப்பிக்க இன்று காலக்கெடு

கொழும்பு,ஓக.29

தரம் ஒன்று வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றுநிருபத்தை இறுதி செய்யும் முயற்சி பூர்த்தியாக வில்லை.

இந்தச் சுற்று நிருபத்தின் இறுதி வடிவத்தை இன்று உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இந்தச் சர்ச்சை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத் தில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, காமினி அமரதுங்க, ஜெகத் பாலப்பட்ட பெந்தி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அச்சமயம், உயர்நீதிமன்றின் முன்னைய வழிகாட்டல்படி தயாரிக்கப்பட்ட - மாணவர் அனுமதிக்கான - சுற்றுநிருபத்தை கல்விச் செயலாளர் அரியரத்ன ஹேவகே நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

ஆனால், இவ்விடயத்தில் வழக்குத் தொடர்ந்த பழைய மாணவர் சங்கங்கள் அந்தச் சுற்றுநிருபத்தைக் கடுமையாக எதிர்த்தன.

மாணவர் அனுமதி தொடர்பாக பாடசாலைகள் தோறும் அமைக்கப்படவிருக்கும் குழுவுக்கு பழைய மாணவர் சங்கப் பிரதிநிதியே தலைமை வகிக்கவேண்டும் என்றும், அக்குழுவின் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் அவருக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் பழைய மாணவர் சங்கங்கள் ஒற்றைக் காலில் நின்றன.

பாடசாலை மாணவர் அனுமதி விவகாரத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைப் பழைய மாணவர் சங்கங்களிடம் கையளிக்க முடியாது என்றார் கல்விச் செயலாளர்.

இறுதியில், அந்தந்தப் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை இத்தகைய குழு ஒவ்வொன்றுக்கும் தலைவராக கல்வித்திணைக்களம் நியமிக்க வேண்டும் என்றும் -

அவரே இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்டவராக இருப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேசமயம், அனுமதியின்போது மாணவருக்கு வழங்கும் புள்ளி அளவு குறித்தும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சுற்றாடலில் உள்ளோருக்கு - 20 புள்ளிகள், சகோதரர்கள் அதே படசாலையில் பயின்றால் - 05 புள்ளிகள், பிள்ளைகளுக்கு - 10 புள்ளிகள், பொதுச் சேவையில் பணி புரிவோரின் பிள்ளைகளுக்கு - 05 புள்ளிகள், பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு - 35 புள்ளிகள் என்பவை உட்பட பல விடயங்கள் நேற்றைய விசாரணைகளில் பிரேரிக்கப்பட்டன.

இவ்வற்றை உள்ளடக்கி புதிய சுற்று நிருபத்தை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நீதியரசர்கள் கல்விச் செயலாளரைப் பணித்தனர். (சி)


## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 14 ஆம் நாள் (31-08-2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.11 மணி முதல் ஒரு மணிவரை வரும் ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபவேளையில்.

எமது ஏக புத்திரி திருவளர் செல்வி

**அபிராமி**

அவர்களுக்கு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டுவிழா நடத்தத் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து, வைபவத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

41/15,முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:
திரு.திருமதி க.சிறிஸ்கந்தராசா - வசந்தலீலா தம்பதியினர்.

(64230)

குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

## ருது சோபன உதகசாந்தி அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் நாளை (30-08-2007) வியாழக்கிழமை காலை 8.25 மணி முதல் 9.11 மணிவரை வரும் உத்தரட்டாதி நட்சத்திரமும் துதியைத் திதியும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரி திருவளர் செல்வி

**கிருஷாந்தி (சிந்து)**

அவர்களுக்கு எமது இல்லத்தில் ருதுசோபன உதகசாந்தி வைபவங்களை நடத்த எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எங்கள் மங்களச்செல்வியை ஆசீர்வதித்து, வாழ்த்தி எங்களை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி பேச்சி அம்மன் கோயில்,
வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 0774016488

தங்கள் நல்வரவை விரும்பும்:
பிரம்மஸ்ரீ சு.பாலகணேசஷர்மா,
ஸ்ரீமதி ஹேமலதா (கணேஸ்).

(64221)

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

## COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250/=~~ 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500/=~~ 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250/=~~ 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250/=~~ 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250/=~~ 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250/=~~ 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250/=~~ 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250/=~~ 1,650/= |

50% Off ADVANCE COURSES

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6000~~ 3000

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :31/08/2007- 9.00AM
Batch II :01/09/2007- 11.00AM
Batch III :02/09/2007 -11.00AM
Batch IV :05/09/2007- 2.00PM

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

September 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 13 ஆம் திகதி (30.08.2007) வியாழக்கிழமை காலை 8.25 மணிமுதல் 9.11 மணிவரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் துதியை திதியும், சித்தயோக மும் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் கனிஷ்ட குமாரி
சௌபாக்கியவதி
**ஜெகஜனனியை**

எங்கள் ஏக புத்திரன்
சிரஞ்சீவி
பிரம்மஸ்ரீ
**ஆனந்தகிருஷ்ணசர்மாவிற்கு**
[காப்புறுதி ஆலோசகர் - செலிங்கோ ஆயுள்பகுதி]

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரணம் செய்ய ஸ்ரீவிநாயகப் பெருமானதும் ஸ்ரீநீலாயதாட்சி சமேத ஸ்ரீ காயாரோகணப் பெருமாணதும் இலங்கை நாயகி அம்பாளினதும் திருவருள் துணையுடன் பெரியோர்களினால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நிகழ இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சமாவர்த்தனம்:* 30.08.2007 வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மணமகனில்லத்தில் நடைபெறும்.

*வரவேற்புபசாரம்:* 02.09.2007 மாலை 3 மணிக்கு மணமகனில்லத்தில் நடைபெறும்.

சுபமங்களம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை அன்புடன் வரவேற்கும்

பிரம்மஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக் குருக்கள்,
ஜெயகௌரி தம்பதியினர்,
வேதாரண்யம்,
45, சட்டநாதர் றோட்,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7616, 0779216862

பிரம்மஸ்ரீ ச.சிவகுமாரக் குருக்கள்,
நிலாயதாட்சி தம்பதியினர்,
செல்வபதி,
அருளம்பலம் லேன்,
கல்வியங்காடு,யாழ்ப்பாணம்.
T.P.:0776306119

(64225)

(இரு வீட்டார் அழைப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ
சிவமயம்
இஷ்டலிங்காயநம, முத்துமாரியம்பாள் துணை, குருப்பியோநம.

# ஆசார்யாபிஷேக அழைப்பு

(குருப்பட்டாபிஷேகம்)



அன்புடையீர்,

நிகழும் மங்கலகரமான சர்வசித்து வருடம் ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் [30-08-2007] வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கன்னி லக்கினமும் கூடிய காலை 8.35-9.10 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எமது கனிஷ்ட புத்திரனாகிய திருநிறைச் செல்வன்

**சிவஸ்ரீ.பே.இன்பராஜ ஐயா**

(யாழ்.சிவானந்தா குருகுல மாணவன், தென்னிந்தியா பிள்ளையார்பட்டி வேதாகம குருகுல கலாசாலை மாணவன்)

அவர்களுக்கு ஆசார்யாபிஷேகம் நடைபெறத் திருவருளும் குருவருளும் கைகூடியிருக்கிறது.

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான பரம்பரை ஆதீன கர்த்தாக்களும் பூசகர்களும் குருவுமாகிய வீரசைவ பரம்பரை சிவஸ்ரீ.வேலாயுதர்ஐயா கனகர்ஐயாவின் பூட்டனும் சிவஸ்ரீ.கனகர்ஐயா வேலாயுதர் ஐயாவின் பேரனும் கிரியாபூஷணம் சிவஸ்ரீ. வேலாயுதர்ஐயா பேரின்பநாதக் குருக்களின் கனிஷ்ட புத்திரருமாகிய பிள்ளையார் பட்டி வேதாகம குருகுல கலாசாலை விஷேட டிப்ளோமா தேர்ச்சி அஹோரசிவம், சைவாச்சார்யா ,சாதகபாஸ்கரன் சிவாகம சாதக பூஷணம் சிவஸ்ரீ. பே.இன்பராஜ ஐயா அவர்களுக்கு பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருக்கோயிலில் ஆச்சார்யாபிஷேகம் நடைபெற இஷ்டலிங்கப் பெருமானினதும், முத்துமாரியம்பாளினதும் கற்பகவிநாயகரினதும் திருவருளும் குருவருளும் கைகூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் சமூகம் தந்து குருவிடம் ஆசிபெற்று வாழ்த்துக்கூறுவதோடு விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆசார்யாபிஷேக பிரதம குரு**
"பிரதிஷ்டா சிரோன்மணி", "சிவாகமசிகிஷா கலாபமணி", "சிவபூஜாரத்தினம்", "சமஸ்கிருதபண்டிதர்"
சிவஸ்ரீ நவரத்தின சிரபுதேவக் குருக்கள் (ஜே.பி.)
[கோழும்புத்துறை கிழக்கு, முத்துமாரியம்பாள் தேவஸ்தான பிரதமகுரு]

**ஆசார்யாபிஷேகம் சிறப்புற நடைபெற அருளாசி வழங்குவோர்**
"விகாவரத்தினா", "சிவாகம போதனாரத்னம்", "சிவநெறிச் செம்மல்", "பிரதிஷ்டா சக்கரவர்த்தி"
டாக்டர் சிவஸ்ரீ K.பிச்சைச்சிவாச்சாரியார்
[ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் பிரதம குரு, வேதாகம பாடசாலை அதிபர், சிவநெறிக்கழகம், பிள்ளையார்பட்டி, தமிழ்நாடு.]
சீர்வளர் சீர்சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
[திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம், 23 ஆவது குருமகா சந்நிதானம், நாகைமாவட்டம், திருவாவடுதுறை, தமிழ்நாடு.]
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
[குருமஹாசந்நிதானம் – ஆதீனகர்த்தா, நல்லைஞானசம்பந்தர் ஆதீனம் -யாழ்ப்பாணம்.]
"சிவாகம பாஸ்காபூஷணம்", "தமிழ்மணி", "வைத்திய கலாநிதி"
சிவஸ்ரீ கிரி. உருத்திரபுரேஸ்வர சிவாச்சாரியார்
[அகில இலங்கை வீரசைவகுருமகாசந்நிதானம், ரேணுகாச்சிரமம் கீரிமலை, உருத்திரபுரம் சிவாலய பிரதம குரு]

**இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் :**
திரு.திருமதி சிவஸ்ரீ வே.பேரின்பநாதக்குருக்களும், சகோதரர்களும்
[பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தாவும், பிரதம குருவும்]
சிவஸ்ரீ வே.பாலசுப்பிரமணிய ஐயா குடும்பம் [பனிப்புலம்]
சிவஸ்ரீ அ.மதிவதனக்குருக்கள் குடும்பம்
[ஜேர்மன் நூறன்பேர்க், சித்திவிநாயகர் ஆலயம்]
திரு.வே.திருச்செல்வம் குடும்பம் [லண்டன்]
(64219) சிவஸ்ரீ பே.ஜெயநாதஐயா குடும்பம் [லண்டன்]

அம்மன் கோவிலடி, பனிப்புலம், பண்டத்தரிப்பு,
தொ.பே.0773065879
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)


## உரங்களை சேமித்து வைக்க மானிப்பாயில் களஞ்சிய அறை

உரங்களை களஞ்சியப்படுத்துவதற்கு மானிப்பாயில் புதிய களஞ்சிய அறை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென மானிப்பாய் சமூக சுகாதார சுற்றாடல் விவகார சபைத் தலைவர், மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க 2 பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கவுள்ளார். இவர் சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையம் அமைக்க ஏற்கனவே 5 பரப்பு காணி இலவசமாக வழங்கியிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை- களஞ்சிய அறை அமைப்பதற்கு விரைவில் நிதிஒதுக்கீடு இடம்பெறுமென யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (202-95)


**தவறிவிட்டது**

சீவரத்தினம் செல்வராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [801204899V] இருபாலைக்கும் - குப்பிளானுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சீ.செல்வராஜ், குப்பிளான் வடக்கு, ஏழாலை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (64242)

**கோழிக்குஞ்சு விற்பனை**

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட original prima பேட்டுக்குஞ்சு, சிவப்பு, வெள்ளை விற்பனைக்குண்டு.
நல்லூர் பாம் சென்ரர்
19, ஸ்ரீ நபேர் ஒழுங்கை, நல்லூர். (64193)

**காணி விற்பனைக்கு**

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 3 அறை வீடுடன் மந்திரிப் போடப்பட்ட நிலையில் 7 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மற்றும் தையல் மெசின் ஒன்றும் (உபகரணம்) விற்பனைக்குண்டு.
சின்னத்துரை ஜெயசீலன், சுதுமலை தெற்கு, எச்சாட்டி, மானிப்பாய். தொ.பே. 0775177598.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு :- ராஜின்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P. 222 2867, 222 3529
(64204)

**அலங்காரக் கண்காட்சி**

CAKE AND SUGAR CRAFT EXHIBITION

கேக், மாச்சீனி அலங்காரக் கண்காட்சி இன்று (29.08.2007) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இடம்: வல்வெட்டித்துறை வீதி, வல்வெட்டி.
(ஒளியருவி வீடியோ அருகில்)
காலம்: 29.08.2007முதல் 31.08.2007 வரை.
நேரம்: மு.ப.10.30 மணி - மாலை 5 மணி வரை. (64141)



# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
**கந்தவனம் தர்ஷிகா**
(மாணவி -கொக்குவில் இந்துக் கல்லூரி)



| சிந்தாமணி விநாயகர் அருளியது | சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது |
|---|---|
| 25.05.1990 | 23.08.2002 |

திதி:29.08.2007

கந்தவனம் மனையில்
களித்தாடி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ?
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

'கவி போட்டோ'
நவாலி தெற்கு. (64061)

அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்,
உற்றார்,உறவினர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவுகளில்...

மண் மகிழ 06 10 1947
கண் நெகிழ 08 09 2006



அமரர்
**சுப்பிரமணியம் சண்முகானந்தன்**

திதி: அபரபக்க பிரதமை 29.08.2007

ஆண்டொன்று ஓடியது.... உறவுகள் ஓடவில்லை....
மாண்டவர் மீண்டதில்லை .... மானிடர் நியதியிது....
மீண்டிடும் நினைவுகள்.... மீட்டிடும் உணர்வுகள்....
வேண்டிடுவோம் இறைவனையே.... உம் ஆத்மா சாந்தியுறவே....

"சந்திரபவனம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/53491)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிமார், பேரமக்கள், உற்றார், உறவினர்கள்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
அனைத்துப் பார்மஸி களிலும்
கடை களிலும் பெற்றுக்கொள்ளலாம். →




ஏக விநியோகஸ்தர்கள்:-
சிவா
நறுமணப்
பங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



# முதலாம் ஆண்டு நினைவு



அமரர் **ஜேசுதாசன் டேமியன்**

| அன்னையின் அணைப்பில் | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|
| 26-10-1975 | 29- 08 - 2006 |

'இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகின்றேன்.'
(லூக்:23:43)

மானித்தும் மறக்க முடியாத அன்புச் செல்வமே! ஆயிரம் கனவுகளுடன் வாழ்ந்து வீழ்த்தப்பட்டவன் நீ, பெற்றோர் நாம் உம்மை ஆசை மகனாய் பாசப்பிணைப்பில் அணைத்த கைகள் சோர்வடையுதே!
சகோதர! விழிகள் முழுவதும் அன்று நிரம்பிய கண்ணீரை இன்றுவரை துடைக்க முடியவில்லையே!
மணக்கோலம்கொண்டு சொற்ப காலத்தில் உங்களைப்பறிகொடுத்த துயர் தீராது
பிறந்திட்ட பிஞ்சு மழலையின் முகத்தில் வல்லவிரன் நீங்கள் இருக்கின்றீர்கள்
உறவினர், நண்பர்கள் உள்ளங்களும் உம்வரவிற்காய் காத்து நிற்கின்றனரே!

இயேசு கிறிஸ்து ஆண்டவர் இவ்வுலகின் மீது கொண்ட அன்பினால் பாடுகள் பட்டு, பாய்ந்தோடிய இரத்தத்தினால் உலகை மீட்டார். உன்னில் அன்று பாய்ந்தோடிய இரத்தமும் எமக்கெல்லாம் எதைத் தரப்போகின்றது......?

'எமதூர் பாதுகாவலி புனித அடைக்கல அன்னை என்னைக் கைவிடமாட்டா.... என்று நம்பி நம்பியே வாழ்ந்திட்ட உம் விசுவாசமும் நம்பிக்கையும் தளராத உறுதியும் கொண்ட பக்தன் நீ, உங்களை வாதாடியென்றாலும் புனிதர்கள் வதிவிடம் சேர்த்திடுவாள்.' (64156)

186, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

உனது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மனைவி, பிள்ளை.



இந்தியாவில் உயர்கல்வி (பொறியியல்) வாய்ப்பு
**HIGHER STUDIES (ENGINEERING) IN INDIA**
SONA COLLEGE OF TECHNOLOGY, SALEM - 636 005, INDIA
(An Endearing Shrine for Excellence in Education)
Approved by AICTE & Affiliated to Anna University
NBA accredited (Mech, EEE, CSE, ECE & MBA) & ISO Certified

2011 MAY இல்
நீங்களும் ஒரு பொறியியலாளர்
இறுதிச் சந்தர்ப்பம் இதோ !!

க.பொ.த உயர்தரம்(2007) பெறுபேறு கிடைக்குமுன்னரே அடிப்படை தகுதிப் பெறுபேற்றை எதிர்பார்ப்பவர்கள் பல்கலைக்கழகத்தின் நடப்பு ஆண்டில் இணைந்து கல்வியைத் தொடரும் வாய்ப்பு.

சகல பொறியியற் பீடங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்.

அனுமதிகள் உடனேயே இங்கேயே வழங்கப்படுகின்றன.

**Bachelor of Engineering (B.E.)**
- Civil Engineering
- Mechanical Engineering
- Computer Science and Engg.
- Electrical and Electronics Engg.
- Electronics and Communication Engg.
- Information Technology
- Fashion Technology

*Elegibility: A/L 3 passes (Maths Stream)*

Limited Admissions

**Post Graduate Courses (M.E)**
- MBA - Master of Business Administration
- MCA - Master of Computer Applications

'மாணவர்களால் மாணவர்களுக்கான மகத்தான சேவை'






For Admissions Contact :

Mr.K.Sanjey
mobile-0773107808
sanjey@hotmail.com

Mr.S.Saaruban(India)
mobile-00919940210057
saaru_10@yahoo.com

Mr.S.Jeyakanth
mobile-0773867257
jeyakanth84@gmail.com

Mr.T.Elankeethan
mobile-0775936343
keethan_15@yahoo.com

V4 CONSULTANCY SERVICE
The Express Institute
Irupalai, Kopay.
phone 021-2225840


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அழுத்தங்களுக்கு மத்தியில் பணியாற்றும் ஊடகங்கள்

இரு மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு மற்றும் சர்வதேச ஊடக ஆதரவு அமைப்பு ஆகிய இரு சர்வதேச ஊடகக் கட்டமைப்புகளின் பிரதிநிதிகள், இலங்கையில் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் போன்ற தரப்புகளின் நிலைமை குறித்து நேரில் ஆராய்ந்த பின்னர் தங்களது அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் முக்கிய பிரதேசங்கள் எங்கும் நேரடியாகச் சென்று அவர்கள் விடயங்களைக் கையாண்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊடகத்துறைக்கு - குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்களுக்கு - எதிரான கொடூரம் எல்லை மீறி அதிகரித்து வருவதை எல்லைகளற்ற ஊடக அமைப்பு அந்த அறிக்கையில் விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகள் உட்பட தமிழ் ஊடகங்களுக்கு எதிரான அழுத்தங்கள், அட்டூழியங்கள், அடாவடித்தனங்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றை இந்தச் சர்வதேச மட்டத்திலான அறிக்கை பதிவுசெய்து அம்பலப்படுத்தியுள்ளது.

அதேசமயம், அது மற்றொரு விடயத்தையும் சுட்டிக் காட்டி நிற்கின்றது. இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்தம் பற்றிய தகவல்கள் இலங்கையின் பல ஊடகங்களின் மூலமும் சர்வதேச ஊடகங்கள் மூலமும் அரைகுறையாக அல்லது பக்கச் சார்பாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதே அதுவாகும்.

தமிழ் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைக்கான காரணங்களுள் இதுவும் ஒன்று. தமிழர் தாயகத்தில் யுத்தத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் மிக மோசமான அழிவு - நாச - சிதைப்பு - வேலைகளை மூடி மறைக்கும் தந்திரோபாயமாகவே ஊடகங்களின் குரல்வளை அங்கு நசுக்கப்படுகின்றது.

தமிழ் ஊடகங்களுக்கு அப்பால், தமிழர் தரப்பின் அவலத்தை அம்பலப்படுத்தும் தேசிய, சர்வதேச ஊடகங்களும் இதேபோன்ற அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றன.

தமிழர்களுக்காகக் குரல் எழுப்புபவர்கள் என்று அல்ல, தென்னிலங்கையில் யுத்த வெறித் தீவிரத்தில் நிற்கும் தரப்புகளின் அட்டூழியங்கள், அத்துமீறல்கள் போன்றவற்றை அம்பலப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்கும் அதே கதிதான்.

பிரபல பாதுகாப்பு ஆய்வாளரும், இராணுவத்துறை விமர்சகரும், மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளருமான இக்பால் அத்தாஸ் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை இந்த வகைக்குள் அடக்கலாம்.

ஒருபுறம் தென்னிலங்கை மக்களுக்கு புலி விரோதத் தீவிரத்தையும், யுத்தம் மூலம் தமிழரை அடக்கியாளும் மிதப்பையும் காட்டிக்கொண்டு, மறுபுறத்தில் அதைப் பயன்படுத்தி நாட்டின் வளத்தை எவ்வாறு மோசடியாகச் சூறையாடுகின்றார்கள் என்பதை அம்பலப்படுத்திய குற்றத்துக்காகச் சிக்கலுக்குள் ஆழ்த்தப்பட்டிருக்கின்றார் இக்பால் அத்தாஸ்.

'மிக் - 27' விமானக் கொள்வனவில் பல கோடி ரூபாசுளையாக ஏப்பம் விடப்பட்டிருக்கும் மோசடி பற்றிய செய்திகளையும் தகவல்களையும் அவர் வெளியிட்டமையை அடுத்து, அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு விலக்கப்பட்டிருக்கின்றது. மர்ம மோட்டார் சைக்கிள்களும், கார்களும் அவரைத் தொடர்கின்றன. அவரது வீடு கடும் கண்காணிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது. அவரது வீட்டுக்கு அருகில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. 'நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி' எனத் தென்னிலங்கை மக்களின் முன்னால் அவர் அடையாளப்படுத்தப்படுகின்றார்.

தான் வாராவாரம் எழுதிவரும் - தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் - மதிக்கப்பட்டு வாசிக்கப்படும் - பாதுகாப்பு நிலைவரம் பற்றிய தமது வாராந்த ஆய்வை எழுதாமல் ஒதுங்கும் நிலைமைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கின்றார்.

ஆக, தேசிய மட்டத்திலும்,சர்வதேச மட்டத்திலும் மிகுந்த மதிப்பும் தொடர்புகளும் கொண்ட இராணுவப் பத்தி ஆய்வாளரான இக்பால் அத்தாஸின் நிலைமையே கேள்விக்குறி என்றால், இந்த இலங்கைத் தீவில் சாதாரண ஊடகவியலாளனின் - அதுவும் அடக்கி, ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் மத்தியில் தாக்குப் பிடிக்கும் - தமிழ் ஊடகவியலாளனின் நிலைமையைக் கூறத் தேவையில்லை; தென்னிலங்கையின் கொடூர அடக்குமுறைக்கு முன்னால் அவர்கள் எம்மாத்திரம் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை.

இந்தப் பின்னணியில் -

உலகில் ஊடகவியலாளர்கள் பணி புரிய மிக மோசமான - ஆபத்தான - இடமாக வர்ணிக்கப்படும் யாழ். குடாநாட்டில் -

தொடர்ந்து செய்திகளைத் தந்து மக்கள் பணி ஆற்றி வரும் 'உதயன்' பத்திரிகையை மேற்படி இரு சர்வதேச ஊடக அமைப்புகளும் தமது அறிக்கையில் விதந்து பாராட்டியுள்ளமை பொருத்தமானதுதான்.

யாழ்ப்பாணத்தில் ஊடக ஊழியர்களது கொலைகள் தொடர்பாகப் பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டும், மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் ஊடக ஊழியர்களின் பாதுகாப்புத் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவேண்டும், ஊடக ஊழியர்கள் மீதான அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் மேற்படி இரு சர்வதேச அமைப்புகளும் தமது அறிக்கையில் முத்தாய்ப்பு வைக்கும் விதத்தில் விடுத்துள்ள கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களின் காதுகளில் ஏறுமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

# சுகாதார அமைச்சில் ரூ 500 கோடி மோசடி; நடவடிக்கை எடுக்க 2 வாரக் காலக்கெடு!

## அரசுக்கு விதிக்கிறது சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம்

கொழும்பு, ஓக. 29

சுகாதார அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சுமார் ஐந்நூறு கோடி ரூபா மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார சேவைகள் சங்கம் அரசிற்கு 14 நாள்கள் காலக்கெடுவை விதித்துள்ளது.

14 நாள்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியிலிருந்து தொடராக நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என அச்சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

சுகாதார அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றிய தகவல்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட அதிகாரிகளின் பெயர் விவரங்களையும் உள்ளடக்கிய மகஜர்களை இந்தச் சங்கம் இன்று காலை ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் அனுப்பி வைக்கவுள்ளது.

இது தொடர்பாக நேற்று அகில இலங்கை சுகாதார சேவை சங்கம் கொழும்பு நிப்பன் ஹோட்டலில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய சங்கத்தின் செயலாளர் காமினி குமாரசிங்க கூறியவை வருமாறு:-

சுகாதார அமைச்சில் பல அதிகாரிகள் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு வருட காலத்திற்குள் ஐந்நூறு கோடி ரூபா நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் உள்ள பல அதிகாரிகள் ஒன்று சேர்ந்து இந்த மோசடிகளில் ஈடுபட்டுவருகின்றனர். சுகாதார அமைச்சருக்கு நாம் பல தடவைகள் இது குறித்து அறிவித்தும் அவர் இதைக் கண்டுகொள்ளவேயில்லை.

இதன் காரணமாக நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்கத் தீர்மானித்துள்ளோம். இந்த மோசடியுடன் தொடர் புபட்ட அதிகாரிகள் மீது விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக உரிய நட வடிக்கை எடுப்பதற்கு நாம் அரசிற்கு 14 நாள்கள் காலக்கெடுவை விதித்துள்ளோம்.

அந்தக் கால எல்லைக்குள் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் இருந்து நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் முன்பாகவும் தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம்.

இடம்பெற்றுள்ள மோசடிகளின் விவரங்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட அதிகாரிகளின் விவரங்களையும் உள்ளடக்கி புதனன்று ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கும் மகஜர்களை அனுப்பவுள்ளோம். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். - என்றார்.

(சி)

## பத்திரிகையாளர் அத்தாஸிற்கு மீண்டும் பாதுகாப்பு வழங்குக

*வலியுறுத்துகிறது பத்திரிகையாளர் சங்கம்*

கொழும்பு, ஓக.29

"சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் ஆலோசக ஆசிரியரும் பாதுகாப்புத் துறை விமர்சகருமான இக்பால் அத்தாஸின் பாதுகாப்பிற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் பாதுகாப்புத்துறை செயலாளரைக் கேட்டுள்ளது.

அத்தாஸிற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு அண்மையில் விலக்கிக் கொள்ளப்பட்டதை மேற்படி சங்கம் கண்டித்துள்ளது.

பத்திரிகையாளர் அத்தாஸிற்கு 2005 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு அண்மையில் முன் அறிவித்தல் இன்றி வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து அவரை மோட்டார் சைக்கிளிலும் கார்களிலும் இனம் தெரியாத நபர்கள் பின் தொடர்ந்து வருகிறார்கள். இதனால் அவருடைய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது என்று பாதுகாப்புச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தாம் தயாரித்து வைத்திருக்கும் பாதுகாப்புத்துறை அறிக்கைகள், ஆவணங்களை கைப்பற்றுவதற்கும் கூட முயற்சிகள் நடைபெற்றுள்ளதாக அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

1998 ஆண்டு விமானப் படைக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்ட வகையில் பெரும் மோசடிகள் நடைபெற்றிருப்பதை வெளிப்படுத்தியதையடுத்து அவர் வீட்டை உடைத்துக்கொண்டு உள்புகுந்த ஒரு கும்பல் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்திருந்தது. அதன் பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு அவ்வப்போது வாபஸ் பெறப்பட்டு அவருக்கும் குடும்பத்தவர்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது. எனவே, வாபஸ் பெறப்பட்ட பாதுகாப்பு ஏற்பாட்டை மீண்டும் வழங்கும்படி உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் பாதுகாப்புத் துறைச் செயலரைக் கேட்டுள்ளது.

இக்பால் அத்தாஸின் நுகேகொடவில் உள்ள இல்லத்திற்கு முன்னால், நேற்று முன்தினம் மேல் மாகாண சபை உறுப்பினர்களின் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது தெரிந்ததே.

(அ-ப)

## விசேட அடையாள அட்டை வழங்கல்; மேலும் மூன்று இடங்களுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.29

யாழ்.நகரம் உட்பட 512ஆவது படையணிப் பிரதேசத்தில் விசேட அடையாள அட்டை வழங்கும் பணி மேலும் மூன்று இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

512ஆவது படையணியின் கட்டளைத் தளபதி இத்தகவலை வெளியிட்டார்.

யாழ்.முற்றவெளியில் இப்போது அடையாள அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகின்றது.

அதற்குமேலதிகமாக கந்தர்மடம் சிவில் அலுவலகம், யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம், நாவாந்துறை சாந்தமேரி தேவாலயம் ஆகிய இடங்களிலும் பதிவு ப் பணிகள் இடம் பெறவுள்ளன .

நேற்றுமுதல் எதிர்வரும் 30ஆம் திகதிவரை கந்தர்மடம் சிவில் அலுவலகத்தில் ஜே.78,79,102,103,105 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 6ஆம் திகதிவரை யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஜே/82, 87, 88, 97, 98, 99, 100, 101, 104 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

எதிர்வரும் 7ஆம்திகதி முதல் 10ஆம் திகதிவரை நாவாந்துறை சாந்தமேரி தேவாலயத்தில் ஜே/81,83,84,85 ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

விசேட அடையாள அட்டை வழங்கும் பணி இடம்பெறும் என்று 512ஆவது படையணியைச்சேர்ந்தமேஜர் பேர்னாட் பெரேரா தெரிவித்தார்.

(அ-1)

## உற்சவத்துக்குச் சென்று திரும்பிய படகு கவிழ்ந்ததில் மூன்றுபேர் பலி

### மட்டக்களப்பு மண்டூரில் சம்பவம்

மட்டக்களப்பு - மண்டூரில் உள்ள முருகன் ஆலயத் தீர்த்தோற்சவத்திற்கு சென்றுவிட்டு நேற்றுமாலை தமது சொந்த ஊரான கல்லாறுப் பகுதிக்குப் படகு மூலம் திரும்பிக்கொண்டிருந்தவர்கள் சீரற்ற காலநிலை காரணமாக அவர்கள் பயணம் செய்த படகு கவிழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 5 வயதுச் சிறுவனும் அடங்குவான் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சீனித்தம்பி - வடிவேல் (வயது- 55), வடிவேல் பிரியா (வயது - 20) மற்றும் குணதிலக லக்ஸ்சித்த (வயது - 05) ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

ஆலயத் திருவிழாவை முடித்துவிட்டு குருமண்வெளி ஆற்றினூடாக 7 பேருடன் பயணஞ்செய்த படகே இந்த அனர்த்தத்தில் சிக்கி நீரில் மூழ்கியது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உயிரிழந்த மூவரைவிட ஏனைய நால்வரும் பொதுமக்களால் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

## மகாபாரத விரிவுரை நிகழ்த்தி சாதனை நிலைநாட்ட முயற்சி

உடுப்பிட்டி, ஓக.29

மகாபாரதம் விளக்கவுரையைத் தொடர்ந்து 9 மணிநேரம் நிகழ்த்தும் முயற்சியை அல்வாயைச் சேர்ந்த 45 வயதுடைய குருக்கள் ஒருவர் மேற்கொள்ள இருக்கின்றார்.

அல்வாயைச் சேர்ந்த சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகரே இச்சாதனை முயற்சியில் ஈடுபடவுள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை (செப்ரெம்பர் முதலாம் திகதி) அல்வாய் ஸ்ரீ ஜெக தீஸ்வரம் ஆலயத்தில் காலை 8 மணிக்கு மகாபாரத விளக்கவுரையை ஆரம்பித்து மாலை 5 மணிக்குப் பூர்த்தி செய்வார். (அ-1-155)

## யாழ். வாசிகள் மூவர் மன்னாரில் கைது

கரவெட்டி மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் நேற்றுக் காலை மன்னார் - பள்ளிமுனைப் பகுதியூடாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியை வந்தடைந்திருக்கின்றனர்.

சட்டவிரோதமான முறையில் வந்தனர் எனக்கூறப்படும் இந்த மூன்று பேரும் விசாரணையின் பின்னர் இன்று வவுனியாவிலுள்ள இவர்களது உறவினர்களின் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாக மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

## சந்நிதி ஆலயத்தில் நெரிசலில் சிக்கிய பக்தர் மயக்கமடைந்து மரணம்

உடுப்பிட்டி,ஓக.29

செல்வச்சந்நிதி ஆலயத்தில் நேற்று நடந்ததீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர் ஒருவர் சனநெருசலில் சிக்கி மயக்கமடைந்து பின்னர் மரணமானார்.

கோப்பாய், பூதர்மடத்தடியைச் சேர்ந்த கந்தன் அரியகுட்டி (வயது 62) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் வீதியில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இவர் சன நெருசலில் சிக்கி வீழ்ந்து மயக்கமடைந்தார்.முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் பயன் கிடைக்காத நிலையில் அவர் மரணமானார்.

பின்னர் அப்பகுதி கிராம சேவகர் சடலத்தை வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தார். (அ-1-155)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 13 | வியாழக்கிழமை 30.08.2007 |
| திதி : துதியை | பி.ப. 01.15 |
| நட்சத்திரம் : | பூரட்டாதி முற்பகல் 08.22 |
| சுபநேரம் | : 07.35 - 09.05 |
| ராகுகாலம் | : 01.35 - 03.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டுக்கு கப்பலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் வாழும் 3, 50 000 மக்கள், இப்போது கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்களிலேயே தங்கியுள்ளனர்.

கடந்த வருடம் ஒகஸ்ட்மாதத்தில் ஏ-9 பாதை மூடப்பட்டு குடாநாடு துண்டிக்கப்பட்டதால் தரைவழிப்பாதை யால் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களைக் கொண்டு வரும் வசதி தட்டிப்பறிக்கப்பட்டது.

கப்பல்மூலம் மட்டும் பொருள் அங்கு கொண்டு செல்லப் படுவதால் பொருள்களின் குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் ஏகிறியும் போயுள்ளன. மக்களால் தாங்கிக் கொள்ள இயலாத அளவுக்கு விலை வாசிகள் உச்சநிலைக்குப் போய் விட்டன.

ஒருகிலோ அரிசி 130 ரூபாவாகவும் ஒருகிலோ கோதுமை மா 100 ரூபாவாகவும் ஒருகிலோ பருப்பு 200 ரூபாவாகவும் பால்மா 300 ரூபாவாகவும் வெளிச்சந்தையில் விற்கப்படுகின்றன.

அரசாங்கம்போதிய அளவு உணவுப் பொருள்களைக் குடா நாட்டுக்கு எடுத்துச் சென்று அப்பகுதி மக்களின் கஷ்டத்தை நீக்க முடியாதா என்று பரவலாக இங்குகோள்வி எழுப்பப்படுகிறது.

இதுகுறித்து கேட்டபோதே, குடா நாட்டிற்கு அனுப்பப்படும் பொருள்களின்அளவு இரட்டிப் பாக்கப்படவுள்ளதாக வர்த்தக, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் பந்துலகுணவர்த்தனா தெரிவித்தார். (அ)


After A/L
IDM
IDM Computer Studies (Pvt) Ltd.
Affiliated University College
216, Navalar Road, Jaffna. T:P-021-222 9901
www.idm.lk - www.idm.org

இலவச கணனிக் கருத்தரங்கு

A/L மாணவர்களுக்கான விசேட இலவச கணனி கருத்தரங்கு 01-09-2007 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைவரும் பங்கு பற்றி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்

OPEN GATEWAY FOR
HIGHER EDUCATION IN - UK
உங்கள் உயர்படிப்பினை
UK சென்று தொடர்வதற்கு திறந்த நுளைவாயில்
IDM



சகல விதமான காலதாமதமற்ற
புகைப்படச் சேவைகளுக்கு

★விசேட அடையாள அட்டை
★தேசிய அடையாள அட்டை
★பாஸ்போட் போன்ற சகல விதமான புகைப்படங்களையும் நவீன தொழில்நுட்ப முறையில் காலதாமதமின்றி உடனுக்குடன் பிரதியாக்கம் செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடங்கள்:

விஸ்ட்டா விஷன் டிஜிட்டல்
கலர்லாப் & ஸ்டூடியோ

52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.:222 5187
(இலுப்பையடிச் சந்தி அருகில்)

347,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:222 8510
(முட்டாஸ் கடைச்சந்தி அருகில்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இகம் 27 - 11 - 1969

பரம் 08 - 09 - 2006

**சதாசிவம் சத்தியசீலன் (ரஞ்சன்)**

(விதுஷன் நகைமாடம், கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்)

திதி:பிரதமை

கனவோ இது நனவோ
நம்பமுடியவில்லை ஐயா உமது இழப்பை
காலம் உருண்டோடி
ஆண்டொன்று ஆகிவிட்டது
காணவில்லை உம் முகத்தை
தேடுகிறோம் நாம் பகல் இரவாய்

இன்று (29.08.2007) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

347/2,கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. இதனால் மற்றைய ஒரு வாசல் வழியாக மட்டுமே துறை முகத்திற்கான உள்நுழைவு - வெளியேற்றப் போக்குவரத்து இடம் பெறுகின்றது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, கப்பல்கள் துறைமுகத்துக்குள் நுழைய அல்லது வெளியேற பல மணி நேரம் காத்துக்கிடக்கும் அவலமும் நேர்ந்துள்ளது.

இப்படி நேரம் வீணாகி, பணி நிறைவு பெறாமல் இழுபடுவதால் கப்பல்களுக்கும், துறைமுகப் பணியாளர்களுக்கும் நிதிச்செலவு பெருமளவில் விரயமாவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தத் தாமதத்தைப் தவிர்ப்பது தொடர்பான ஏற்பாடுகள் குறித்தும் துறைமுகப் பாதுகாப்பு ஒழுங்குகள் குறித்தும் ஆராய்வதற்கு கடந்த வாரம் துறைமுக அதிகாரிகளுக்கும், துறைமுகப் பாதுகாப்புக்குப் பொறுப்பான கடற்படையின் உயரதிகாரிகளுக்கும் இடையே முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றதாகவும் தெரிய வருகின்றது.

இப்பகுதியில் நீருக்கடியிலான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அத்துமீறிய ஊடுருவலைக் கண்டுபிடிக்கவும் பல்வேறு தொழில் நுட்ப உத்திகளை அங்கு பரீட்சித்துப் பார்த்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தக நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவரவும், அதேசமயம் துறைமுகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு உட்புகு பாதை மூலம் விடுதலைப் புலிகள் துறை முகத்திற்குள் சுலபமாக நுழைந்துவிடுவர் என்ற அச்சத்தால் கொழும்புத் துறைமுகத்திற்குள் கப்பல்கள் வந்து போகும் இரண்டு பாதைகளில் ஒன்றான வடக்கு உட்புகு வழி கப்பலோட்டத்துக்கு மூடி வைக்கப்பட்டுள்ளது.

## அத்தாஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுரையை சிங்களத்தில் மொழி பெயர்த்து ''லங்காதீப''வில் வெளியிடுவதற்குப் பொறுப்பாக உள்ள குணரத்தினவிடம் சென்று, இனிமேல் மொழி பெயர்ப்புச் செய்யக் கூடாது என்று மிரட்டினார்.

மீறிச் செயற்பட்டால் கொலை செய்யப்படுவார் என்றும் வெளியே இருந்து வந்த நபர் எச்சரித்துச் சென்றார்.

அத்தோடு, பாதுகாப்புத்துறை விமர்சகர் இக்பால் அத்தாஸ், தமது உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் 3 மாதங்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற எச்சரிக்கைத் தகவலையும் மாகாணச் செய்தி ஆசிரியர் குணரத்னவிடம் அவர் கூறிச் சென்றார். (அ-1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர் என்றும் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பில் புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பாலமோட்டைப் பகுதியில் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு புலிகளின் காவலரண்கள் உள்ள பகுதிகளை நோக்கிப் படையினர் முன்னேற்ற முயற்சியினை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே அங்கு கடும் மோதல் வெடித்தது. படையினரின் இம்முன்னேற்ற முயற்சிக்கு எதிராகப் புலிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் அந்த முன்னேற்ற முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

மாலை 6.30 மணிவரை நடைபெற்ற இம் மோதலில் படையினர் தரப்பில் மூவர் கொல்லப்பட்டு ஐந்துபேர் காயமடைந்துள்ளனர் எனக் களமுனைத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை. - என்றார் அவர்.


IBS
கல்வி நிலையம்
(கல்வியங்காடு, கண்டுக்குழி)
Philosophy
G.A.Q., PAR-I, B.A., Final
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
(Sat., Sun)
ஆசிரியர்
N.உதயகுமார்
B.A. (Hons), Phil.Spl


## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காளிமுத்து சிவானந்தன் (வயது-22) மற்றும் கைலாயபிள்ளை தயானந்தன் (வயது -18) ஆகியோரே காணாமல் போயிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் கையடக்கத் தொலைபேசிக்கு 'கிற்காட்' கொள்வனவு செய்வதற்காக ஓட்டமாவடிப் பகுதிக்குச் சென்ற வேளையிலேயே காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணையை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


VCM
Institute
இணைந்த கணித வகுப்புக்கள் மீள ஆரம்பம்
A/L 2008
வியாழன் :3.00p.m.
A/L 2009
வியாழன் :1.30p.m.

PHYSICS
Personal & Group Class
இடம்:
மருதடிலேன், நல்லூர்.
தொடர்பு:
021 222 2452

ICT Grade 10 English / Tamil
Medium R. Kumaran - B.Sc.
Potpathy Road, Kokuvil
T.P. 0776577359 புதிய பிரிவுகள் ஆரம்பம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Computerized Accounting
(Tally, Accpack, MYOB, QuickPro)
* MS Office *DTP *V.B., .net
* Hardware * Web Designing
* Vide Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
பதிவுகள் 01-09-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MGS
Supported By UMCHRRP


## நாச்சிக்கோயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு தாமும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும், இதில் விடுதலைப் புலிகளுக்கு சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் படைத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

## பேத்தாழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட இந்த இயந்திரப்படகைச் சோதனை செய்தபோது சி - 4 ரக வெடி மருந்துகள், தொலைத்தொடர்புக்கருவிகள்மற்றும்ஏனைய வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள் ளன. பயங்கரவாத நோக்கங்களுக்காகவே இந்த ஆயுதங்கள் கடத் திச் செல்லப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந் துள்ளதாம்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உடன்பாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுகளுக்கு அரசாங்கத்தின் கதவுகள் எப்பொழுதும் திறந்து இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு தடவைகளிலும் கூறிவந்துள்ள நிலையில், பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வன்னிப் பிரதேசத்தின் மீதும் இராணுவத் தாக்குதலை நடத்தவிருப்பதாகக் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்களை கண்காணிப்புக் குழு அவதானித்து வருவதாகவும் இவை பற்றிய தனது கருத்துக்களை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வருவதாகவும் வழமையான அறிக்கையில் விமர்சித்து வருவதாகவும் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

**பிரேதப் பெட்டிகளை ஏற்றி இறக்க பழைய விமானங்களை வாங்குவதா?**

கோதாபாய ராஜபக்ஷவின் கருத்துக் குறித்து ஐ.தே.க பிரமுகர் லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

மிக் - 27 போன்ற பழைய விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான எதிர்கால முயற்சிகளை நியாயப்படுத்துவதற்கான ஒரு கபட நோக்கம் இதில் இருக்கலாம்.

பாதுகாப்புச் செயலாளரின் கருத்து ஆச்சரியமளிப்பதாக இருக்கின்றது. ஏனென்றால் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ இரகசிய தகவல்களை அனுப்பி இருப்பதாக நாம் அறிய வந்துள்ளோம்.

வழமைபோலவே இந்த அரசாங்கம் தான் என்ன செய்கின்றது என்பது அதற்கே தெரியாமல் இருக்கின்றது. ஒருவேளை பிரேதப் பெட்டிகளை ஏற்றி இறக்குவதற்குத் தேவையான 25 வருடம் பழமையான விமானங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கமும் இருக் கலாம் என்று கூறினார்.

அனைத்துக் கட்சி மாநாட்டின் மூலம் இறுதித் தீர்வுத் திட்டமொன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி முயன்று கொண்டிருக்கும் இந்த வேளையில், பாதுகாப்புத்துறைச் செயலாளர் வன்னிப் பிரதேசத்தையும் கைப்பற்றியே தீருவோம் என்று கருத்து வெளியிட்டிருப்பது குழப்பகரமாக இருக்கின்றது என்று கிரியெல்ல கூறினார். (அ-ப)

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் நாகரத்தினம்

துன்னாலை, அல்லியம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் நாகரத்தினம் நேற்று (28.08.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியத்தின் (முன்னாள் முகாமையாளர் - CWE)மனைவியும் காலஞ்சென்ற செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, தங்கராசா ஆகியோரின் சகோதரியும் பாலகுமார் (லண்டன்), சுரேஸ்குமார் (சமுர்த்தி உத்தியோகத்தர் - கரவெட்டி) ஆகியோரின் தாயும் நிமாலினி (லண்டன்), சுகந்தினி ஆகியோரின் மாமியும் நிரோசன், கவிதா ஆகியோரின் பேர்த்தியும் சீவரத்தினம், இந்திராணி காலஞ்சென்ற சிவமணி ஆகியோரின் மைத்துனியும் நிரோசன், சியாமளா, தீனதயாளன், அனுஷா, திவாகரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (29.08.2007) புதன்கிழமை கருகம்பனை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லியம்பதி,
துன்னாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org